நாள்: 27.08.2026
OP 50/2023 JTW 232/2024
பெயர் பால்பாண்டி
எ.ம.சா.4

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இன்று நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்துள்ள விவரம் எதிர்மனுதாரர் கீர்த்தனாவுக்கு தெரியும். மனுதாரர் விவாகரத்து கோரி வழகது தாக்கல் செய்துள்ளார். கீர்த்தனா சேர்ந்து வாழ வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளார். 2 வது திருமணத்துக்கு நான் சென்ற போது மதுசூதனன் முகம் நினைவில் இல்லை. அதனால் நான் தடுக்கவில்லை. 2 வது திருமணம் செய்த விவரம் எதிர்மனுதாரர் தகப்பனார் ஜெயசந்திரன் சொன்னபின்னர் தான் தெரியும். ஜெயசந்திரன் தான் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் சொல்ல அழைத்து வந்தார். ஜெயசந்திரன் எனக்கு மாமன் முறை வேண்டும், அவர் மாமா என்பதால் தான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மதுசூதனன் 2 வது திருமணம் செய்யும் போது அவர் 2 வது திருமணம் தான் செய்தாரா என்று எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் தகப்பனார் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உபய மனுதாரரர்களும் காவல் நிலையத்தில் பிரச்சனையை பேசி விவாகரத்து செய்துகொள்ள சம்மதித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்